**சார்பு நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திருமதி S. மும்தாஜ், B.Sc.,B.L.,**
**சார்பு நீதிபதி, சீர்காழி.**
2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 26–ம் நாள் வியாழக்கிழமை

**<u>அசல் வழக்கு எண். 84/2022</u>**

**<u>CNR No. TNMY06-000802-2022</u>**

ஈரோடு முன்சிபி மற்றும் டவுன், ஈரோடு – 4 சூளை முனியப்பன்கோயில் தெரு, 9 பி1, பி2, சி.கே.ஆர். நகர் என்ற முகவரியில் வசிக்கும் கிருஷ்ணமூர்த்தி குமாரர் 52 வயதுள்ள ரவீந்திரன்.

..வாதி

...எதிர்...

1. தரங்கம்பாடி முன்சிபி மற்றும் தாலுக்கா, விளநகர், ஆறுபாதி, மேட்டிருப்பு என்ற முகவரியில் வசிக்கும் கிருஷ்ணமூர்த்தி மனைவி 50 வயதுள்ள ராஜலெட்சுமி.

2. தரங்கம்பாடி முன்சிபி மற்றும் தாலுக்கா, விளநகர், ஆறுபாதி, மேட்டிருப்பு என்ற முகவரியில் வசிக்கும் கிருஷ்ணமூர்த்தி குமாரர் 37 வயதுள்ள வாஞ்சிநாதன்.

...பிரதிவாதிகள்

தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி சட்டத்திற்கு புறம்பாக தாவா 1, 2 அயிட்ட சொத்தின் ஒரு பகுதியில் ரோட்டை ஒட்டி 1, 2 அயிட்ட சொத்தில் சுமார் 600 சதுரடியில் போட்டுள்ள ஷெட்டை அப்புறப்படுத்த வேண்டி அவர்மேல் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், 2ம் பிரதிவாதி தாவா 1 மற்றும் 2 அயிட்ட சொத்தில் உள்ள ஷெட்டை நீதிமன்றம் குறிப்பிடும் காலக்கெடுவுக்குள் அப்புறப்படுத்த வேண்டியும், அவ்விதம் செய்யாவிடில் கோர்ட் அமீன் மூலம் ஷெட்டை அப்புறப்படுத்த உத்தரவு பிறப்பிக்க வேண்டியும், 2ம் பிரதிவாதி தாவா 1 மற்றும் 2 அயிட்ட சொத்தின் ஒரு பகுதியில் போட்டுள்ள ஷெட்டை பிரித்து விட்டு தாவா சொத்தை காலி மனையாக வாதி வசம் ஒப்படைக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டியும், 2ம் பிரதிவாதி 3 வருடத்திற்குரிய கணக்கை வாதிக்கு கொடுக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டியும், செலவுத் தொகை வேண்டியும் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு தாக்கலான நாள் –12.09.2022 மற்றும் 18.10.202, 28.11.2022 மற்றும் 23.11.2022. இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்– 25.11.2022.

இவ்வழக்கு மூலமானது 2012, 2020, 2021, 2022 மார்ச் 31ம் தேதி முதலும், 26.07.2022 தேதி முதலும் தரங்கம்பாடி தாலுக்கா, ஆறுபாதி விளநகரில் உற்பத்தி.

இவ்வழக்கு நீதிமன்ற கட்டணத்திற்காகவும், அதிகார வரம்பிற்குமாக ரூ.1,97,640/- செய்து அதற்கான நீதிமன்ற கட்டணம் ரூ.5,930/- நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 27(C), 30 & 35 ன் கீழ் இத்துடன் செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக 24.02.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. ஏ. ராம்குமார் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். சுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

## தீர்ப்பாணை

1. வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கக் கூடியதல்ல என்று தீர்மானித்து இவ்வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. செலவு தொகை இல்லை. இருதரப்பிலும் செலவுத் தொகை பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை. வாதி தரப்பு செலவுத் தொகை ரூ.5,949/-.

## செலவுப்பட்டியல்

| வ.எ. | செலவுகள் | வாதிக்காக<br>ரூ. பை. | பிரதிவாதிக்காக<br>ரூ. பை. |
|---|---|---|---|
| 1 | வழக்குரையின் நீ.ம.க. | 5,930.00 | -- |
| 2 | வக்காலத்து | 10.00 | - |
| 3. | படி மெமோ | 9.00 | -- |
| | மொத்தம் | 5,949.00 | - |

## சொத்து விபரம்

மயிலாடுதுறை பதிவு மாவட்டம், செம்பனார்கோயில் சார் பதிவகம், தரங்கம்பாடி தாலுக்கா, ஆறுவாதி விளநகர்.

1) ஆர்.எஸ். எண்.45/4பி 0.03.00 ஏர்ஸ் புஞ்சை

ரஸ்தாவுக்கு தெற்கு,

45/8, 45/10க்கு வடக்கு,

பக்கிரிசாமி வீட்டிற்கு மேற்கு,

கோவிந்தசாமி சொத்திற்கு கிழக்கு,

2) ஆர்.எஸ்.எண்.45/பி 0.02.00 ஏர்ஸ் நஞ்சை

வாதி சொத்திற்கு மேற்கு

சாமித்துரை சொத்திற்கு கிழக்கு

வாய்க்காலுக்கு வடக்கு,

குமாரசாமி சொத்திற்கு தெற்கு.

அயிட்டம் 1 மற்றும் 2 சேர்த்து ஆக்கிரமிப்பு 600 சதுரடி ரோட்டிற்கு தெற்கு, பாக்கி மனைக்கு வடக்கு, 1 மற்றும் 2 அயிட்ட சொத்து குடியிருப்பு மனைக்கு கிழக்கு, மேற்கு.

3) ஆர். எஸ்.எண்.45/8 0.24.50 ஏர்ஸ் நஞ்சை

ரோட்டிற்கு தெற்கு,

வாய்க்காலுக்கு வடக்கு,

சாமித்துரை வகையறா சொத்திற்கு கிழக்கு,

வெங்கட்ராமய்யர் சொத்திற்கு மேற்கு,

இந்த தீர்ப்பபாணை 2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் நாள் என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு வழங்கப்பட்டது.

(ஒம்/-..எஸ்.மும்தாஜ்)
சார்பு நீதிபதி, சீர்காழி.

**தீர்ப்பாணை.**

**அசல் வழக்கு எண்.** 84/2022

**நாள் –** 26.03.2026